சுருக்கம்

கோவிட்–19 – ஏப்ரல், மே மற்றும் ஜூன், 2021 ஆகிய மூன்று மாதங்களில் கோவிட்19க்காக தொடர்பணியில் ஈடுபட்ட மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு (ப்பி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.461

நாள் : 26.10.2021,
பிலவ, ஐப்பசி 9,
திருவள்ளுவர் ஆண்டு 2052

1. அரசாணை (நிலை) எண். 256, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி1)துறை, நாள் 28.05.2021.
2. அரசு கடித எண் 19683/ப்பி1/21, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு (ப்பி.1) துறை, நாள் 07.06.2021.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.எண். 051303/தி–1/அ1/2021, நாள் 22.07.2021, 23.07.2021 மற்றும் 26.07.2021.

*****

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கோவிட் பணியில் 2021 ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மூன்று மாதங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் காலமுறை ஊதியத்துடனான பணியில் உள்ள அரசுப் பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஊக்கத்தொகை வழங்குவதற்காக ரூபாய் நூற்று அறுபது கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரின் கடிதங்களின் வழி, மருத்துவம் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குமாறு கோரியுள்ளார்.

4. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்து, கீழ்க்காணும் துறைகளில் ஏப்ரல், மே மற்றும் ஜூன், 2021 ஆகிய மூன்று மாதங்களில் கோவிட்19–க்காக தொடர்ந்து பணிபுரிந்த

1,05,168 பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது :–

| வ. எண். | துறையின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை | 34,396 | 65,11,90,000 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை | 13,371 | 28,19,15,000 |
| 3. | மருத்துவக் கல்வி துறை | 49,908 | 91,69,65,962 |
| 4. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை | 270 | 55,75,000 |
| 5. | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி) துறை | 962 | 1,96,05,000 |
| 6. | தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் (TNHSRP) | 6,261 | 9,39,15,000 |
| மொத்தம் | | 1,05,168 | 196,91,65,962 |

5. மேலே பத்தி நான்கில் கோரப்பட்டுள்ள தொகை ரூ.1,96,91,65,962/–ல் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தின் வழி, ஏப்ரல், மே மற்றும் ஜூன், 2021 ஆகிய மூன்று மாதங்களில் கோவிட்19–க்காக தொடர்பணியில் ஈடுபட்டு வந்த மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக ரூ.160 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சூழ்நிலையில், மீதமுள்ள தொகையான ரூ.36,91,65,962/– (ரூபாய் முப்பத்தாறு கோடியே தொண்ணூற்றொரு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டு மட்டும்) கூடுதலாக ஒதுக்கீடு செய்து ஆணையிடப்படுகிறது.

6. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2245 – இயற்க்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 80 பொது – 800 ஏனைய செலவு – மாநில செலவினங்கள் – AH கொரோனா வைரஸ் (கோவிட்–19) பேரழிவை கட்டுப்படுத்துதல் / தடுப்பு நடவடிக்கைகளுக்கு தயாராயிருத்தல் – 309 உதவித் தொகை – 09 ஏனையவை.

IFHRMS த.தொ.கு. 2245 80 800 AH 309 09.

7. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதி ரூ.36,91,65,962/– 2021–2022–ஆம் நிதி ஆண்டுக்கானத் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021–2022–ஆம் நிதி ஆண்டிற்கான துணைமானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை

எதிர் நோக்கி மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையாளர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் 2021-2022-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (வருவாய்/வ.செ.பொ-1) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையாளர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இத்திட்டத்தின் கீழ், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் படி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குர் அவர்கள், உரிய முன்மொழிவுகளை வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையருக்கு உரிய நிதி ஒதுக்கீடு கோரி அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், மேற்குறிப்பிட்டவாறு கோவிட் பெருந்தொற்று காலத்தில் அரசு மருத்துவமனைகளில் நேரடியாக தொற்றாளர்களுடன் பணிபுரிந்த தகுதி உடைய பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க ஏதுவாக அந்தந்த துறை இயக்குநர்கள் / திட்ட இயக்குநர்களுக்கு தேவைப்படும் தொகையினை செயல்முறையின் படி பகிர்ந்தளிக்க ஆணையாளர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை அலுவல் சாராக் குறிப்பு எண்.45055 / வருவாய் / 2021, நாள்:25.10.2021-இல் நிதித் துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.661 (அறுநூற்று அறுபத்தொன்று).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர்,
வருவாய் நிர்வாகம் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சேப்பாக்கம்,
சென்னை-600 005.

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை-600 006.

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை,
சென்னை-600 006.

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை (தொ.அ.ஈ),
சென்னை-600 006.

இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநரகம், சென்னை -600 010.

இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை,
அரும்பாக்கம், சென்னை-600 106.

திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம், சென்னை–600 006.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–600 035.

<u>நகல்:</u>
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை–600 009.
மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளரின்,
தனிச் செயலர், சென்னை–600 009.
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைச் துறை முதன்மைச்
செயலாளரின், தனிச் செயலர், சென்னை–600 009.
நிதி (வருவாய் /வ. செ. பொ–1/II/வழிவகை– I) துறை,
சென்னை–600 009.
மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் (தகவுப் பிரிவு) துறை,
சென்னை–600 009.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

26/10/21
பிரிவு அலுவலர்